# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2192/21 - 2020 සැප්තැම්බර් මස 08 වැනි අඟහරුවාදා - 2020.09.08

*2192/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 6/2017* (i)

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 117(2)(ட) என்னும் பிரிவின்கீழ் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**பிரசன்ன ரணதுங்க,**
*சுற்றுலாத்துறை அமைச்சர்.*

கொழும்பு,
*2020, செத்தெம்பர் 07.*

ஒழுங்குவிதிகள்

*2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய 1869/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (பசவி), மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (மராசவி) மற்றும் இரத்மலானை விமான நிலையம் (இவி) என்பவற்றின் விமான நிலையத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-*

*(1) அதன் 1 ஆம் ஒழுங்குவிதியில், "இரத்மலானை விமான நிலையம் (இவி)" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கொழும்பு சர்வதேச விமான நிலையம் இரத்மலானை (கொசவிஇ)" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;*




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அதன் 3 ஆம் ஒழுங்குவிதியில்–

(அ) 3 ஆம் ஒழுங்குவிதியை அதன் (1)ஆம் உப ஒழுங்குவிதியாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) "பசவி, மராசவி மற்றும் இவி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (பசவி), மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் (மராசவி) மற்றும் கொழும்பு சர்வதேச விமானநிலையம் இரத்மலானை (கொசவிஇ)" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உப ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய உப ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2) இவ்வொழுங்கு விதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச விமானச்சேவைக் கம்பனியொன்று, 2020.09.08 ஆந் தேதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்கு இவ்வுபவொழுங்கு விதிக்கான பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களில் தரையிறங்குதல் மற்றும் தரிப்பிடக் கட்டணக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

| விமானநிலையத்தின் பெயர் | ஐசீஏஓ குறியீடு | ஐஏரீஏ குறியீடு |
|---|---|---|
| மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் (மராசவி) | வீசீஆர்ஐ | எச்ஆர்ஐ |
| கொழும்பு சர்வதேச விமானநிலையம், இரத்மலானை (கொசவிஇ) | வீசீசீசீ | ஆர்எம்எல்" |

(3) அதன் 4, 5 மற்றும் 6 ஆகிய ஒழுங்குவிதிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"4. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

"சட்டம்" என்பது, 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டம் என்று பொருளாகும்;

"விமான நிலையத்தளம்" என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச விமானசேவைக் கம்பனிகள்" என்பது, அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச வான் சேவைகளைத் தொழிற்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு வான் சேவைக் கம்பனி என்று பொருளாகும்; அத்துடன்

"நியதிச்சட்டச் சேவை வழங்குநர்" என்பது, 6(3)(அ) என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நியதிச்சட்டச் சேவை வழங்குநர் என்று பொருளாகும்.

09-570

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.